அரசு வந்தபின்புதான் திடீரென நிர்ணயிக்கப்பட்டது போலவும், பொதுமக்கள் மத்தியில் தவறான கருத்துக்களைப் பரப்ப முற்படுவது, முற்றிலும் அரசியல் உள்நோக்கம் கொண்ட பிரச்சாரம் என்பதைத் தெரிவித்துக்கொண்டு (மேசையைத் தட்டும் ஒலி) பொதுமக்களைத் திசைதிருப்பும் தவறான செயல்களில் இனியும் ஈடுபடவேண்டாம் என்று கேட்டுக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110-ல் நீங்கள் பேச முடியாது.

திரு. எஸ். திருநாவுக்கரசு: ஒரேவொரு கிளாரிபிகேஷன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கிளாரிபிகேஷன் கூட கேட்கமுடியாது.

5. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக்கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கே. செல்வராஜ், பொதுக்கணக்குக் குழுவின் தலைவர்.

***திரு. கே. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீரத்தின் விளைநிலம், விவேகத்தின் உறைவிடம், பாசத்தின் பிறப்பிடம், மக்கள் சக்தியின் மணிமகுடம், உலகத் தமிழர்கள் வாழ்வில் பெருமையைச் சேர்த்த தமிழ்த்தாய், (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலேயே இராணுவம் போல நல்லாட்சியை நடத்தும் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை வணங்கி, பொதுக் கணக்குக் குழுவின் சார்பாக 149-வது மற்றும் 150-வது ஆகிய இரண்டு அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மனுக்கள் குழுவின் அறிக்கையை அளித்தல். திரு எஸ். ஜெயக்குமார், மனுக்கள் குழுவின் தலைவர்.

திரு. எஸ். ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையினுடைய 1994–95–ஆம் ஆண்டுக்கான மனுக்கள் குழுவின் 29–வது அறிக்கையைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

(இ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கையை அளித்தல். திருமதி ஜீனத் சர்புதீன், பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர்.

திருமதி ஜீனத் சர்புதீன்: மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, புவி ஆள வந்த புரட்சித் தலைவி அவர்களுக்கு என் வணக்கத்தைச் சொல்லிவிட்டு, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 1994–95–ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் 52 முதல் 57 வரையிலான அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) வேளாண் விளைபொருள் வாணிக (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1995.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள். (அறிமுகம் செய்தல்)

1995–ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிக (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1995–ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் வாணிக (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.